**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்**
**முன்னிலை: திருமதி.எஸ்.சப்னா,B.B.M.,L.L.M.,**
**நீதித்துறை நடுவர், பல்லடம்**
**2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 08 ஆம் நாள் சனிக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057, பராபவ வருடம் ஆடி திங்கள் 23 ஆம் நாள்**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 81/2020**
**CNR No.TNTI11 000408 2020**

அரசுக்காக:
காவல் ஆய்வாளர்,
பல்லடம், காவல்நிலையம்,
குற்ற எண்.52/2018) ... புகார்தாரர்

– எதிர் –

துரை (வயது 40),
த/பெ. கருந்தமலை,
¾ கேஜி லே அவுட்,
4 வது வீதி, NRK புரம்,
திருப்பூர். ... எதிரி

**குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், பல்லடம்**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.81/2020**

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 தேதியிட்ட ROC. No. 814/2020 F1 (P.Dis.No.36/2021) படியும் விதி 106 Criminal Rules of Practice – 2019 ன்படியும் வழக்கின் தொகுப்பு கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

| S.No. | Case summary | | | |
|---|---|---|---|---|
| (I) | The Period of remand of the accused | Name of the accused | Date of Remand | Release on |
| | | Durai | 29.01.2018 | 29.01.2018 |
| (ii) | Date of filling of the complaint/ final report in the court | Filling of Complaint | Filing of Final report | |
| | | Complaint Statement on 25.01.2018 | பல்லடம் குற்றவியல் நீதித் துறை நடுவர் நீதிமன்றத்தில் 12.08.2020 தேதியன்று தாக்கல் செய்யப் பட்டது. | |
| (iii) | Date of Committal of the case to the court of Sessions | Not applicable | | |
| (iv) | Date of Questioning of | 06.10.2020 | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | the accused under section 279, 304(A) of IPC as the case may be | | | |
| (v) | Filing of all Miscellaneous petitions and their results | Crl.M.P.No. | Date of filing | Result |
| | | - | - | - |
| (vi) | Date of Examination in chief and cross | Name of the Examination | Date of Chief | Date of Cross |
| | | PW1- Selvam | 01.06.2026 | 01.06.2026 |
| | | PW2- Karthikaivel | 01.06.2026 | 01.06.2026 |
| | | PW3- Nagaraj | 01.06.2026 | 01.06.2026 |
| | | PW4- Souhathali | 01.06.2026 | 06.07.2026 |
| | | PW5- Athiyappan | 01.07.2026 | 01.07.2026 |
| | | PW6-Suburathinam | 27.07.2026 | 27.07.2026 |
| (vii) | Date of Examination of the accused under section 313 of the Code | | | 06.08.2026 |
| (viii) | Details of abscond of an accused and his appearance/production, as the case may be | | | Nil |
| (ix) | Grant of stay by Superior Courts and the results there of | | | Nil |

இந்த வழக்கானது கடந்த 13.08.2020–ஆம் தேதி CC.No.81/2020–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசுக்காக அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.S.செந்தில்குமார் அவர்களும், எதிரிக்காக எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.A.பழனிச்சாமி அவர்கள் முன்னிலையாகியும் கடந்த 06.08.2026 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது இருதரப்பும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## தீர்ப்புரை

1)கடந்த 25.01.2018 ம்தேதி 20.00 மணிக்கு பல்லடம் பகுதிக்குட்பட்ட டிகேடிமில்– கணபதிபாளையம் ரோட்டில் குறிஞ்சி நகர் ஆனந்த் இன்ஞ்ஜினியரிங் ஒர்க்ஸ் அருகில் எதிரி TN 59 Q 3808 என்ற எண்ணுள்ள Eicher Van வாகனத்தை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் மனித உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் ஓட்டி சென்று அதே ரோட்டில் எதிர் திசையில் வடக்கிலிருந்து தெற்குநேக்கி ஓட்டி சென்ற KL 70 B 947 என்ற எண்ணுள்ள TVS Super XL வண்டியின் மீது

மோதி விபத்தை ஏற்படுத்தியதில் Eicher Van TN 59 Q 3808 மற்றும் TVS Super XL KL 70 B 947 ஆகிய வாகனங்களுக்கு சேதம் விளைவித்தும், மேற்படி விபத்தில் சுனில்குமார் என்பவருக்கு வலது பக்க நெற்றி வலது கால் தொடை வலது முழங்கால் இடது கெண்டைகால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டு மூக்கில் இரத்த வந்தும் சம்பவ இடத்திலேயே இறந்துள்ளதாக எதிரி மீது சட்டப் பிரிவுகள் 279,304(A)இதசவின் கீழ் பல்லடம், காவல்நிலைய காவல்ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2)எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலை ஆனவுடன் எதிரிக்கு அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207ன் கீழ் கட்டணமின்றி வழங்கப்பட்டது.

<u>குற்றத்தின் சாராம்சத்தையும் குற்றத்தினையும் விவரித்தல்:</u>

3)எதிரிக்கு போதியகால அவகாசம் கொடுக்கப்பட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களுக்கு போதுமான முகாந்திரம் இருந்ததால் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279, 304(A)இதசவின் கீழான குற்றம் பற்றி, விளக்கி கூறி வினவியபோது எதிரி குற்றங்களை மறுத்து கூறி சாட்சிகளை விசாரணை செய்ய வேண்டினார். எனவே அரசுதரப்பு சாட்சிகளை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

4)அதன்படி, அரசுதரப்பில் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 13 வரை பட்டியலிடப் பட்டு, எதிரி மீதான குற்றத்தினை நிரூபிக்கும் வகையில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

<u>5) அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>

இவ்வழக்கானது கேரளா மாநிலம், இடுக்கி மாவட்டம், வண்டிபெரியார் வழி, சோத்துபாறை என்ற முகவரியில் வசித்து வரும் செல்வம் என்பவர்

கொடுத்த புகாரின் அடிப்படையில் தொடரப்பட்டுள்ளது. அவர் அ.சா.1 ஆக விசாரிக்கப் பட்டு அவர் மூலம் அ.சா.ஆ.1 புகார் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 அவரது புகாரில் தான் கேரளா மாநிலம் வண்டிபெரியார் பக்கம் உள்ள சோத்துபாறையில் குடியிருந்து வருவதாகவும் எஸ்டேட்டில் வேலை செய்த போது திருவனந்தபுரம் பக்கம் உள்ள வெங்காரமூடு, வாத்தியார்கோனம் புத்தன் வீட்டை சேர்ந்த பாலகிருஷ்ணன் மகன் சுனில்குமார் என்பவரை காதலித்து கடந்த 1989 ல் திருமணம் செய்து கொண்டதாகவும் அவரது கணவர் ஈழுவர் ஜாதியை சேர்ந்தவர் என்றும் அவர்களுக்கு செல்வமாரி, சுகன்யா, சுதா என்ற மூன்று மகள்கள் இருப்பதாகவும் அ.சா.1 ன் கணவர் கடந்த 15 வருடங்களுக்கு முன்பு வண்டி பெரியாரில் இருந்து திருப்பூர் வந்து பெயிண்டிங் வேலை செய்து வந்தபோது பாலக்காடு சித்தூர் பக்கம் உள்ள நம்பூரிசெல்லா என்ற ஊரைச் சேர்ந்த கண்டன் என்பவரது மகள் லட்சுமியை இரண்டாவதாக திருமணம் செய்து அஞ்சனா என்ற மகளும் உன்னிகுட்டன், அனந்தகிருஷ்ணன் என்ற மகனும் இருப்பதாகவும் கடந்த 15 நாட்களுக்கு முன்பு அவினாசிபாளையம் பக்கம் உள்ள நாச்சிபாளையம் நால் ரோட்டில் இருக்கும் ஐயங்கார் பேக்கரியை லீசுக்கு எடுத்து நடத்தி வருவதாகவும் அவரது கணவர் இரண்டாவது மனைவியின் பெயரில் KL 70 B 947 TVS Super XL வண்டியை வாங்கி ஓட்டி வந்ததாகவும் கடந்த 24.01.2018 ம் தேதி இரவு 10.30 மணிக்கு அ.சா.1 வண்டிப்பெரியார் அவரது வீட்டில் இருந்தபோது அவரது கணவரின் நண்பர் மகன் கார்த்திக் என்பவர் அ.சா.1 க்கு போன் செய்து அவரது கணவர் சுனில்குமார் பேக்கரிக்கு பொருட்கள் வாங்க திருப்பூருக்கு சென்றுவிட்டு நாச்சிபாளையம் நால்ரோடு வருவதற்காக TVS Super XL KL 70 B 947 ஐ டிகேடி – கணபதிபாளையம் ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி இரவு 9 மணி சுமாருக்கு குறிஞ்சி நகர் பக்கம் உள்ள ஆனந்த் இன்ஜினியரிங் கம்பெனிக்கு அருகில் வந்தபோது எதிர்திசையில் Eicher வண்டியை TN 59 Q 3808 அதன் ஓட்டுநர் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி அஜாக்கிரதையாகவும்,

அதிவேகமாகவும் ஓட்டி வந்து மோதி விட்டதாகவும் அடிபட்டு இறந்து விட்டதாகவும் சம்பவத்தை கார்த்திகைவேல் என்பவர் அ.சா.1 யிடம் தகவல் சொன்னதாகவும் அ.சா.1 அவரது உறவினர்களும் மற்றும் இரண்டாவது மனைவியின் அண்ணன் சிவன் ஆகியோர் பல்லடம் ஜிஎச்க்கு வந்து பார்த்தபோது அவரது கணவருக்கு முகம், மற்றும் வலது கால் முட்டிக்கு கீழ் இரத்த காயம் ஏற்பட்டு இறந்துகிடந்தார் அ.சா.1 விசாரித்தபோது அவரது கணவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்திய Eicher வேன் TN59 Q 38087 ஐ வண்டியை ஓட்டி வந்தவர் திருப்பூரை சேர்ந்த துறை என சொன்னார் மேற்படி விபத்தை ஏற்படுத்திய வண்டியின் ஓட்டுநர் மீது விசாரித்து நடவடிக்கை எடுக்குமாறு கூறப்பட்டுள்ளது.

6)இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன சுனில்குமார் என்பவரின் பிரேத விசாரணையின்போது உடனிருந்த சாட்சியாக அ.சா.2 கார்த்திகைவேல் என்பவரும் கண்ணுற்ற சாட்சியாக அ.சா.3 நாகராஜ் என்பவரும் பார்வை மகசர் சாட்சியாக அ.சா.4 சௌகாத் அலி என்பவரும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

7)இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.5 ஆத்தியப்பன், தலைமை காவலர் அவரது சாட்சியத்தில் கடந்த 25.01.2018 ம் தேதி பல்லடம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது செல்வம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று பல்லடம் காவல்நிலைய குற்ற எண்.52/ 2018 சட்டப்பிரிவுகள் 279,304(A) இதசவின் கீழ் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும் வாதியின் புகாரினை இணைத்து நீதிமன்ற நடுவருக்கு அனுப்பி வைத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

8)இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.6 சுப்புரத்தினம், காவல் ஆய்வாளர் அவரது சாட்சியத்தில் கடந்த 25.01.2018 ம் தேதி பல்லடம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது பல்லடம்

காவல் நிலைய தலைமை காவலர் ஆத்தியப்பன் அன்றையதினம் காலை 8.30 மணிக்கு நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது செல்வம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று பல்லடம் காவல்நிலைய குற்ற எண்.52/2018 சட்டப்பிரிவுகள் 279,304(A) இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து புலன் விசாரணைக்காக பார்வைக்கு வைத்த வழக்கு கோப்பை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினமே காலை 9.30 மணிக்கு சம்பவ இடமான டிகேடி மில் கணபதிபாளையம் ரோடு குறிஞ்சி நகர் ஆனந்த் இன்ஜினியரிங் ஓர்க்ஸ் முன்பு சென்று சாட்சி ராஜேந்திரன் மற்றும் சௌகத் அலி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும் பின்னர் சம்பவ இடத்தை செல்போன் மூலம் புகைப்படம் எடுத்ததாகவும் அன்றைய தினமே பல்லடம் அரசு மருத்துவமனை வந்து மருத்துவ பிரேத கிடங்கில் இறந்து போன சுனில்குமார் என்பவர் பிரேதத்தின்மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்பு காலை 11.00 முதல் 13.30 மணிவரை அ.சா.ஆ.5 பிரேத விசாரணை செய்து அறிக்கை தயார் செய்ததாகவும் பிரேதத்தின் இறப்பின் காரணம் அறியும் பொருட்டு பிரேதத்தினை தலைமை காவலர் நாகராஜ் என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்ததாகவும் சாட்சிகள் செல்வம், சிவன், அனில், சத்தியராஜ், கார்த்திகைவேல், கோபி, நாகராஜ், ராஜேந்திரன், சௌகத் அலி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் அன்றையதினமே எதிரி ஓட்டிவந்த வாகனமான TN 59Q 3808 என்ற ஈச்சர் வண்டியை மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெறவேண்டி வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பியதாகவும் 16.02.2018ம் தேதி அன்று விபத்தில் சம்மந்தமப்பட்ட வாகனமான TVS Super XL KL 70 B 947 என்ற வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெறவேண்டி வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பியதாகவும் 09.03.2018ம் தேதியன்று சாட்சி தங்கராஜ் மோட்டார் வாகன ஆய்வாளர் திருப்பூர் தெற்கு அவர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்றும்

மோட்டார் வாகன ஆய்வாளர் பாஸ்கர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்றும் அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 ஆய்வறிக்கை பெற்றதாகவும் சாட்சி மருத்துவர் ஜமுனாராணி பல்லடம் அரசு மருத்துவமனை மருத்துவர் அவர்களை விசாரித்து அ.சா.ஆ.8 பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் ஆத்தியப்பன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் இத்துடன் புலன் விசாரணை முடித்து 09.03.2018ம் தேதி எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279,304(A) இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக கூறப்பட்டுள்ளது.

**9)கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)ன் கீழ் எதிரியிடம் வினவப்பட்ட வினாவிற்கான பதில்:**

அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச.313(i)(b) பிரிவின் கீழ் வினவியபோது எதிரி சாட்சிகள் அனைத்தையும் பொய் சாட்சிகள் என்றும், பொய் வழக்கு என்று தெரிவித்தும், மேலும் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததால் எதிரி தரப்பு சாட்சிகள் இல்லை என்று முடிக்கப் பட்டது.

**அரசு தரப்பு வாதம்:**

10)அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சியங்கள் மூலம் எதிரி மீதான குற்றம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.5 மற்றும் புலன் விசாரணை செய்த அதிகாரியான அ.சா.6ன் சாட்சியத்தின் மூலம் அரசுதரப்பு வழக்கு மற்றும் அரசுதரப்பு சான்றாவணங்கள் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது என்றும், எனவே அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப் பட்டுள்ள பிரிவுகள் 279,304(A)இதசவின் கீழான குற்றம் நிரூபணம் செய்யப்பட்டு விட்டதாகவும், எனவே எதிரிக்கு பிரிவுகள் 279, 304(A)இதசவின் கீழான குற்றத்திற்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டும்

என்று வாதிட்டார்.

<u>எதிரி தரப்பு வாதம்:</u>

11)இவ்வழக்கில் குற்றயிறுதியறிக்கை மற்றும் அதனுடன் தாக்கல் செய்யப் பட்ட ஆவணங்களின் வாயிலாக எதிரி மீது சுமத்தப்பட்டு இருக்கும் குற்றங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 240 ன் கீழ் வினவியபோது, இவ்வழக்கு பொய் வழக்கு என்று கூறி, அரசுதரப்பு வழக்கை மறுத்துள்ளார். மேலும், அரசுதரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அதில் எதிரிக்கு பாதகமாக உள்ள அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச. 313(i)(b) பிரிவின் கீழ் எதிரியிடம் வினவியபோது, சாட்சிகள் அனைத்தும் பொய்சாட்சிகள் என்று கூறி அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை மறுத்து உள்ளார்.

12)மேலும் எதிரி தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தின் போது வழக்கு விபத்தானது எவ்வாறு யாருடைய அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்று யாரும் சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியத்தின் மூலம் எதிரியின் அதிவேகமும், அஜாக்கிரதையும் தான் காரணம் என்பதாக அரசுத்தரப்பில் தகுதி நிலை ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க வில்லை என்றும், அதனால் எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யவேண்டும் என்று வாதிட்டார். ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

<u>தீர்மானிக்கப்பட வேண்டிய பொருண்மை:</u>

13)இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கும் போது அ.சா.1 செல்வம் அவரது சாட்சியத்தில் விபத்தில் இறந்துபோன சுனில்குமார் தனது கணவர் என்றும் அ.சா.1 ன் கணவர் கேரளாவில் வண்டி பெரியாரில் இருந்து திருப்பூர் வந்து பெயிண்டிங் வேலை செய்து வந்ததாகவும் அவரது கணவர் ஆச்சிபாளையம் நால்ரோட்டின் அருகில் வீடு எடுத்து தங்கியிருந்ததாகவும் கடந்த 24.01.2018 ம் தேதியன்று இரவு 10.30 மணியளவில்

அ.சா.1 வீட்டில் இருந்தபோது கார்த்திக் என்கிற கார்த்திகைவேல் என்பவர் போன் செய்து அ.சா.1ன் கணவர் சுனில்குமார் பொருட்கள் வாங்க திருப்பூருக்கு சென்றுவிட்டு நாச்சிபாளையம் நால்ரோட்டிற்கு இருசக்கர வாகனத்தில் வந்த போது டிகேடி மில் கணபதிபாளையம் ரோட்டில் குறிஞ்சி நகர் அருகில் ஆனந்த் இன்ஜினியரிங் கம்பெனி அருகே வந்தபோது எதிர்திசையில் வந்த ஈச்சர் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னதை கேள்விப்பட்டு அ.சா.1 உடனே பல்லடம் அரசு மருத்துவமனை வந்து பார்த்தபோது கணவருக்கு முகம், வலது கால் முட்டு ஆகிய இடங்களில் அடிபட்டு இறந்த நிலையில் இருந்ததாகவும் பின்னர் விபத்து குறித்து விசாரித்து விபத்து ஏற்படுத்தியவர் மீது நடவடிக்கை எடுக்க கோரி அ.சா.ஆ.1 புகார் கொடுத்ததாக கூறியுள்ளார்.

14)மேலும், அ.சா.1 அவரது குறுக்குவிசாரணையில் சம்பவம் பற்றி தனக்கு நேரடியாக தெரியாது என்றும் மற்றவர்கள் சொல்லிதான் தெரியும் என்பதாகவும் கார்த்திகைவேல் என்பவர் சொல்லி தான் தெரியும் என்றும் அ.சா.1 தான் காவல் நிலையம் சென்று புகாரை கைப்பட எழுதிக்கொடுத்ததாகவும் கார்த்திகைவேல் அ.சா.1யிடம் வேறு எதுவும் சொல்லவில்லை என்றும் அவரது கணவர் எந்த திசையில் இருந்து வந்தார் என்பது பற்றி தனக்கு தெரியாது என்றும் விபத்தை ஏற்படுத்திய நபர் யார் என்று சொல்லவில்லை என்றும் காவல்நிலையத்தில் வைத்து காவலர்கள் சொல்ல சொல்ல அ.சா.1 புகாரை எழுதியதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அ.சா.1ன் சாட்சியத்தின் மூலம் அ.சா.ஆ.1 புகாரின் உண்மைத் தன்மை நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

15)இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன சுனில்குமார் என்பவரின் பிரேத விசாரணையின்போது உடனிருந்த சாட்சியான அ.சா.2 கார்த்திகைவேல் அவரது சாட்சியத்தில் விபத்தில் இறந்துபோன சுனில்குமாரை தெரியும் என்றும் அவர் பல்லடம் நாச்சிபாளையம் நால்ரோட்டில் ஐயங்கார் பேக்கரியை லீசுக்கு எடுத்து

நடத்தி வந்ததாகவும் கடந்த 24.01.2018 ம் தேதி இரவு 9.00 மணியளவில் பேக்கரிக்கு சாமான்கள் வாங்குவதற்காக திருப்பூர் சென்றுவிட்டு டிகேடி மில்கணபதிபாளையம் ரோட்டில் குறிஞ்சி நகர் அருகில் ஆனந்த் இன்ஜினியர் கம்பெனி அருகே எதிர்திசையில் வந்த ஈச்சர் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாகவும் அந்த விபத்தை நேரில் பார்த்தவர் அ.சா.2 க்கு போன் செய்து தகவல் சொன்னதாகவும் பின்னர் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது அவர் இறந்திருந்ததாகவும் சுனில்குமாரின் மனைவி போலீசில் புகார் கொடுத்ததாகவும் சுனில்குமார் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

16)மேலும், அ.சா.2 அவரது குறுக்குவிசாரணையில் சம்பவம் பற்றி தனக்கு ஆம்புலன்ஸ் டிரைவர் தகவல் சொன்னதாகவும் இறந்தவருக்கு எங்கு அடிபட்டது என்றால் தலை, காலில் அடிபட்டது என்றும் அ.சா.2 தான் செல்வம் அவர்களுக்கு தகவல் சொன்னதாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 பிரேத விசாரணையின்போது உடனிருந்த சாட்சியாக உள்ள நிலையில் அவரது சாட்சியத்தின் மூலம் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவான பதில் எதுவும் பெறப் படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

17)இவ்வழக்கு விபத்தை கண்ணுற்ற சாட்சியாக அ.சா.3 நாகராஜ் அவரது சாட்சியத்தில் சுமார் 12 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் சொந்த வேலையாக கணபதி பாளையம் சென்று வந்தபோது டிகேடி மில் கணபதிபாளையம் ரோட்டில் வந்து கொண்டிருந்தபோது குறிஞ்சிநகர் அருகே அ.சா.3 க்கு முன்னால் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த நபர் மீது ஈச்சர் வண்டி மோதி விபத்து ஏற்பட்டது உடனே அ.சா.3 வண்டியை நிறுத்தி பார்த்தபோது அவருக்கு தலை மற்றும் கை, கால் ஆகிய இடங்களில் அடிபட்டிருந்தது அவரது சட்டை பாக்கெட்டில் இருந்த செல்போனை எடுத்து கார்த்திக் என்பவருக்கு தகவல் சொன்னதாகவும் பின்பு ஆம்புலன்ஸ் மூலம் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு

அனுப்பி வைத்ததாகவும் ஆஜர் எதிரி தான் விபத்தை ஏற்படுத்திய ஈச்சர் வாகனத்தை ஓட்டி வந்த நபர் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அ.சா.3 ன் சாட்சியத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது விபத்தில் இறந்துபோன நபர் எதிர்திசையில் வந்ததாகவும் விபத்தை தான் நேரடியாக பார்த்ததாகவும் சாட்சியம் அளிக்கப்பட்ட நிலையில் வழக்கு விபத்திற்கு எதிரியின் அதிவேகமும், அஜாக்கிரதையும் தான் காரணம் என்பதாக எவ்வித சாட்சியம் அளிக்கவில்லை.

18)இவ்வழக்கின் பார்வைமகசர் சாட்சியான அ.சா.4 சௌகாத் அலி அவரது சாட்சியத்தில் சுமார் 8 வருடங்களுக்கு முன்பு காலை9.00 மணியளவில் கணபதிபாளையம் ரோட்டில் உள்ள குறிஞ்சி நகர் அருகில் விபத்து ஏற்பட்டது சம்மந்தமாக போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும் அதற்கு சாட்சியாக அ.சா.4 ம் ராஜேந்திரன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்ததாகவும் பார்வைமகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்று சாட்சியம் அளித்துவிட்டு அவரது குறுக்குவிசாரணையில் அ.சா.4 கையொப்பம் செய்த தாளில் என்ன விவரம் எழுதியிருந்தது என்று தனக்கு தெரியாது என்றும் போலீசார் கூப்பிட்டதால் சம்பவம் இடம் மறுநாள் காலை சென்றதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அ.சா.4 ன் சாட்சியத்தின் மூலம் அ.சா.ஆ.2 பார்வை மகசர் ஆவணத்தின் உண்மைத்தன்மை நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

19)மேலும், அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 முதல்அ.சா.4, வரையிலான சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் வழக்கு விபத்திற்கு எதிரியின் அதிவேகமும், அஜாக்கிரதையும் தான் காரணம் என்பதாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. அ.சா.1 அவரது சாட்சியத்தில் சம்பவம் பற்றி தனக்கு நேரடியாக தெரியாது என்றும் கார்த்திகைவேல் சம்பவம் பற்றிஅ.சா.1 யிடம் எந்த

தகவல் சொல்லவில்லை என்றும் அ.சா1ன் கணவர் எந்த திசையில் இருந்து வந்தார் என்பது பற்றி அ.சா.1க்கு தெரியாது என்பதாகவும் அ.சா.1 சம்பவம் நடந்து அடுத்த நாள் பல்லடம் காவல்நிலையம் சென்று புகாரை அ.சா.1 கைப்பட எழுதிக் கொடுத்ததாக கூறியுள்ளார். ஆனால் அ.சா.ஆ.1 புகாரினை பார்க்கும் போது புகாரானது சம்பவத் தன்றே கொடுக்கப்பட்டுள்ளது என்பது ஆவணத்தின் மூலம் அறியமுடிகிறது. மேலும், விபத்தில் இறந்துபோன சுனில்குமார் என்பவரின் பிரேத விசாரணையின்போது உடனிருந்த சாட்சியான அ.சா.2 மற்றும் பார்வைமகசர் சாட்சியான அ.சா.4ன் சாட்சியத்தின் மூலம் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவான பதில் எதுவும் பெறப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், புலன் விசாரணை அதிகாரியான அ.சா.6 அவரது சாட்சியத்தில் விபத்து நடந்த இடமானது வளைவான சாலை என்று சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது விபத்தில் இறந்துபோன சுனில்குமார் தான் தலைகவசம் எதுவும் அணியாமல் 24 அடி ரோட்டில் அதிவேகமாக வந்து விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்தும், இவ்வழக்கின் எதிரி மீதான குற்றச்சாட்டானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படாத நிலையில் எதிரி மீதான குற்றச்சாட்டிலிருந்து எதிரியை விடுதலை செய்யலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

20)முடிவில் எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(A)ன் கீழான குற்றச் சாட்டிலிருந்து குற்றவாளி இல்லை என தீர்மானித்து குவிமுச பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

21)இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்பட்டு ஆஜர்படுத்தப் படவில்லை.

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால்

சரிபார்க்கப்பட்டு, பிழைகள் திருத்தம் செய்யப் பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 08 ம் நாளில் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப் பட்டது.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2026.08.08 14:14:54 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 01.06.2026 | திருமதி.செல்வம் க/பெ. சுனில்குமார் – புகார்தாரர் |
| அ.சா.2 | 01.06.2026 | திரு.கார்த்திகைவேல் த/பெ. முருகன் –பிரேத விசாரணையின் போது உடனிருந்த சாட்சி |
| அ.சா.3 | 01.06.2026 | திரு.நாகராஜ் த/பெ. நாராயணசாமி – கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | 01.06.2026 | திரு.சௌவுகத் அலி த/பெ. ஹனிபா – பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.5 | 01.07.2026 | திரு.ஆத்தியப்பன், தலைமை காவலர் – முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த அதிகாரி |
| அ.சா.6 | 27.07.2026 | திரு.சுப்புரத்தினம், காவல் ஆய்வாளர் – புலன் விசாரணை அதிகாரி |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1/அ.சா.1 | 25.01.2018 | புகார் |
| அ.சா.ஆ.2/அ.சா.4 | 25.01.2018 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.3/அ.சா.5 | 25.01.2018 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4/அ.சா.6 | 25.01.2018 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 /அ.சா.6 | 25.01.2018 | இறந்துபோன சுனில்குமார் என்பவரின் பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.6 /அ.சா.6 | 29.01.2018 | TN 59 Q 3808 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.7/அ.சா.6 | 16.02.2018 | KL 70 B 947 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.8/அ.சா.6 | 25.01.2018 | இறந்துபோன சுனில்குமார் என்பவரின்பிரேத பரிசோதனை அறிக்கை |

**அரசு தரப்பு சான்றுப் பொருட்கள்:** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணம் மற்றும் சான்றுப் பொருட்கள்:** இல்லை.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2026.08.08 14:15:01 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

**குறிப்பு**

1) எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானிக்கப்பட்டார்.

2) வழக்கு விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்து வந்தார்.

3) வழக்கு முடிவின் விவரம் தக்க காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

4)வழக்கின் விசாரணை காலத்தில் சாட்சிகள் யாரும் 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப் படவில்லை.

5) தீர்ப்பின் நகல் மேன்மைமிகு திருப்பூர், தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.